## யூலை – 07 – பொதுக்கால 14ம் வார ஞாயிறு
**‘இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!’ லூக் 10:5**

---

**முதல் வாசகம் : ஏசாயா 66 : 10 – 14**

எருசலேமின்மேல் அன்புகொண்ட அனைவரும் அவளுடன் அகமகிழ்ந்து அவள்பொருட்டு அக்களியுங்கள் அவளுக்காகப் புலம்பி அழும் எல்லாரும் அவளுடன் சேர்ந்து மகிழ்ந்து கொண்டாடி ஆர்ப்பரியுங்கள். அப்போது அவளின் ஆறுதல் அளிக்கும் முலைகளில் குடித்து நீங்கள் நிறைவடைவீர்கள் அவள் செல்வப் பெருக்கில் நிறைவாக அருந்தி இன்பம் காண்பீர்கள். ஆண்டவர் கூறுவது இதுவே. ஆறுபோல் நிறைவாழ்வு பாய்ந்தோடச் செய்வேன் பெருக்கெடுத்த நீரோடைபோல் வேற்றினத்தாரின் செல்வம் விரைந்து வரச்செய்வேன் நீங்கள் பால் பருகுவீர்கள் மார்பில் அணைத்துச் சுமக்கப்படுவீர்கள் மடியில் வைத்துத் தாலாட்டப்படுவீர்கள். தாய் தன்பிள்ளையைத் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன் எருசலேமில் நீங்கள் தேற்றப்படுவீர்கள். இதை நீங்கள் காண்பீர்கள், உங்கள் இதயம் மகிழ்ச்சிகொள்ளும், உங்கள் எலும்புகள் பசும்புல்போல் வளரும் ஆண்டவர் தம் ஆற்றலைத் தம் ஊழியருக்குக் காட்டுவார்.

**பதில்பாடல் :** அனைத்துலகோரே, கடவுளைப்போற்றி ஆர்ப்பரியுங்கள்.

**இரண்டாம் வாசகம் : கலாத்தியர் 6 : 14 – 18**

சகோதர சகோதரிகளே, நானோ நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் சிலுவையை அன்றி, வேறு எதைப்பற்றியும் ஒருபோதும் பெருமை பாராட்ட மாட்டேன். அதன் வழியாகவே, என்னைப் பொறுத்த வரையில், உலகம் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறது. உலகைப் பொறுத்தவரையில் நானும் சிலுவையில் அறையப்பட்டிருக்கிறேன். விருத்தசேதனம் செய்து கொள்வதும் செய்துகொள்ளாமல் இருப்பதும் ஒன்றே. புதியபடைப்பாவதே இன்றியமையாதது. இந்தக் கொள்கையைப் பின்பற்றுவோருக்கும் கடவுளின் மக்களாகிய இஸ்ரயேலருக்கும் அமைதியும் இரக்கமும் உரித்தாகுக! இனிமேல் எவரும் எனக்குத் தொல்லை கொடுக்கவேண்டாம். ஏனெனில் என் உடலில் உள்ள தழும்புகள் நான் இயேசுவுக்கு அடிமை என்பதற்கு அடையாளம். சகோதர சகோதரிகளே, நம் ஆண்டவர் இயேசுகிறிஸ்துவின் அருள் உங்களோடு இருப்பதாக! ஆமென்.

**நற்செய்தி : லூக்கா 10 : 1 – 12, 17 - 20**

அக்காலத்தில் இயேசு வேறு எழுபத்திரண்டு பேரை நியமித்து, அவர்களைத் தாம் போகவிருந்த எல்லா ஊர்களுக்கும் இடங்களுக்கும் தமக்கு முன்னே இருவர் இருவராக அனுப்பினார். அப்போது அவர் அவர்களை நோக்கிக் கூறியது ”அறுவடை மிகுதி வேலையாள்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் தேவையான வேலையாள்களை அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்கள். புறப்பட்டுப் போங்கள் ஓநாய்களிடையே ஆட்டுக் குட்டிகளை அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகிறேன். பணப்பையோ வேறு பையோ மிதியடிகளோ எதுவும் நீங்கள் எடுத்துச் செல்லவேண்டாம் வழியில் எவருக்கும் வணக்கம் செலுத்தவேண்டாம். நீங்கள் எந்த வீட்டுக்குள் சென்றாலும், ”இந்த வீட்டுக்கு அமைதி உண்டாகுக!” என முதலில் கூறுங்கள். அமைதியை விரும்புபவர் அங்கு இருந்தால், நீங்கள் வாழ்த்திக் கூறிய அமைதி அவரிடம் தங்கும் இல்லாவிட்டால் அது உங்களிடமே திரும்பிவிடும். அவர்களிடம் உள்ளதை நீங்கள் உண்டு குடித்து அந்த வீட்டிலேயே தங்கியிருங்கள். ஏனெனில் வேலையாளர் தம் கூலிக்கு உரிமை உடையவரே வீடுவீடாய்ச் செல்லவேண்டாம். நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக் கொண்டால் உங்களுக்குப் பரிமாறுவதை உண்ணுங்கள். அங்கு உடல் நலம் குன்றியோரைக் குணமாக்கி, இறையாட்சி அவர்களை நெருங்கி வந்துவிட்டது எனச் சொல்லுங்கள். நீங்கள் செல்லும் ஊரில் உங்களை ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதன் வீதிகளில் சென்று, ”எங்கள் கால்களில் ஒட்டியுள்ள உங்கள் ஊர்த் தூசியையும் உங்களுக்கு எதிராக உதறிவிடுகிறோம். ஆயினும் இறையாட்சி நெருங்கிவந்துவிட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்” எனச்சொல்லுங்கள். அந்த நாளில் அவ்வூர் பெறும் தண்டனை சோதோம் நகரினர்பெறும் தண்டனையைவிட கடினமாகவே இருக்கும் என உங்களுக்குச் சொல்கிறேன். பின்னர் எழுபத்திரண்டு பேரும் மகிழ்வுடன் திரும்பிவந்து, ”ஆண்டவரே, உமது பெயரைச் சொன்னால் பேய்கள் கூட எங்களுக்கு அடிபணிகின்றன” என்றனர். அதற்கு அவர், ”வானத்திலிருந்து சாத்தான் மின்னலைப் போல விழக்கண்டேன். பாம்புகளையும் தேள்களையும் மிதிக்கவும், பகைவரின் வல்லமை அனைத்தையும் வெல்லவும் உங்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறேன். உங்களுக்கு எதுவுமே தீங்கு விளைவிக்காது. ஆயினும் தீய ஆவிகள் உங்களுக்கு அடிபணிகின்றன என்பதுபற்றி மகிழ வேண்டாம். மாறாக, உங்கள் பெயர்கள் விண்ணகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன என்பது பற்றியே மகிழுங்கள்” என்றார்.

**தியானம் :** அமைதியை தேடுகின்றன இன்றைய உலகமும் மக்களும். எங்கு அமைதி இருக்கின்றது? உள்நாட்டுப்போர் முடிந்து 10 ஆண்டுகள் கடந்த நிலையில் எமது தாயகத்தில் அமைதி நிலவுவதாக எல்லோரும் நினைத்தார்கள். ஆனால் இன்று அங்கு அமைதி இல்லை. எல்லோரும் பயந்து வாழ்கின்ற சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இதுதான் இன்றைய எல்லா நாடுகளின் நிலையும். தமது நாடு அமைதியாக வாழ்கின்றது என்று சொல்லக்கூடிய நிலையில் நாடுகளும் இல்லை, மக்களும் இல்லை. அதனால்தான் யேசு எப்போதும் அமைதி உரித்தாகுக என்ற வார்த்தையை பாவித்தார் என்று எண்ணத் தோன்றுகின்றது. அமைதி உள்ள இடத்தில் சமாதானமும் விடுதலையும் உண்டு. அது இல்லை என்றால் அங்கு என்ன இருக்க முடியும்? இருளும் இருளின் ஆட்சியும் தான் நடக்க முடியும். இருளின் மத்தியில் ஒளியைக் காண முடியாது. இருள் விலக சூரியனின் உதயம் தேவைப்படுவது போல் இவ்வுலக இருள் விலக யாரின் உதயம் தேவைப்படுகின்றது? மக்களின் மனங்கள் கல்லாகிப் போய்விட்டது. எல்லோரும் அப்படி என்று சொல்ல முடியாது. மனித நேயமுள்ளவர்களும், உதவி செய்யும் மனம் கொண்டவர்களும் இருக்கத்தான் செய்கின்றார்கள். ஆனால் இவர்களால் சூழ உள்ள இருளை அகற்ற முடியவில்லை. மதக் கோட்பாடுகளும் தவறான புரிதலும், யார் பெரியவர் என்ற போட்டியும் எம்மை சூழ உள்ள இருள். வன்முறையும், வக்கிர எண்ணங்களும், காம இச்சைகளும் எம்மை சூழ உள்ள இருள். இந்த இருளால்தான் இன்றைய உலகம் சீர்கெட்டுப் போகின்றது. அன்று சொதோம் கொமோராவில் நடந்த குற்றங்கள்தான் இன்று இடம் பெறுகின்றன. பாவம் பெருகினால் என்ன நடக்கும் என்பது நமக்கு தெரியும். எனவே நாம் அழிவில் இருந்து பாதுகாக்கப் பட வேண்டும். அதற்காக இறைவனிடம் வேண்டுவோம். அறுவடைக்கு தேவையான மக்கள் எம்மத்தியில் இருந்தும் வர வேண்டுவோம். நாமும் எமது சொல்லால், வாழ்வால் பல உள்ளங்களை அறுவடை செய்து கொள்ளலாம்.